REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 8உ சனி (22—12—56) ★ ★ வெளியூர்: மார்கழி 9உ ஞாயிறு (23—12—56) [இதழ் 168

கவர்னர்கள் நியமனம்: தகுதிகள் பற்றி மக்கள் சபையில் கேள்வி

'ஒரு மாநிலத்தின் கவர்னராக ஒருவரைப் பொறுக்கி எடுப்பதற்கு, எந்த அம்சம் கேந்திரமாக அமைகிறது?' என்று தோழர் எச். வி. காமத் மக்கள் சபையில் கேட்டிருக்கிறார்.

பதிலளித்த உள்நாட்டிலாகா மந்திரி பி. என். தத்தார் 'ஒரு கவர்னரின் வேலைகளைச் சரிவரச் செய்வதற்குரிய தகுதியே கேந்திரமான அம்சமாகும்; கவர்னர் நியமனங்கள் பிரதமரின் சிபாரிசின் பேரில் குடியரசுத் தலைவரால் செய்யப்படுகின்றன; பிரதமர் சிபாரிசு செய்கையில் தனது சகாக்களையும், சம்பந்தப்பட்ட மாநில முதன் மந்திரியையும் கலந்தாலோசித்துக்கொள்வார்,' என்றும் கூறியிருக்கிறார்.

'டில்லியுடன் கடுமையாக போராட வேண்டும்'

இந்தியாவிற்குள் ஓடிவரும் அகதிகள்

புதுடில்லி, டிச. 20—

கள்ளத்தனமான பாஸ்போர்ட்டுகள் பெற்றுக்கொண்டு சுமார் 25,000 பேர் அகதிகளாக, கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு ஓடிவந்துள்ளனராம்.

இதை, அகதிகள் மந்திரி கன்னா மக்கள்சபை உறுப்பினர் ஆலோசனைக்குழுவில் தெரிவித்திருக்கிறாராம்.

சில 'சமூக விரோத சக்தி'கள் இதுபோன்று 'திருட்டுப் பாஸ்போர்ட்டு'கள் வழங்குகின்றனவாம். இந்தச் செயலில் ஈடுபட்டுள்ள ஒரு கும்பலில் சிலர் ஏற்கனவே பிடிபட்டுவிட்டார்களாம்.

டாக்காவிலுள்ள இந்திய உதவித் தூதுவராலுவலகத்தில் 'பாஸ்போர்ட்' வழங்குவதற்காகக் கையாளப்படும் முறை அகதிகளை இந்தியா வருவதைக் கட்டுப்படுத்துவதாக இருக்கவில்லை; மாறாக ஒழுங்கு படுத்துவதாகவே இருக்கிறது என்றும் அவர் கூறினாராம்.

'தொழில் அபிவிருத்தியில் தென்னாடு படுமோசமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது'

'வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் வேண்டும்'

காமராசர் சர்க்காருக்கு எஸ். அனந்தராமகிருஷ்ணன் அறைகூவல்

திருச்சி, டிச. 21—

"வடநாட்டு நகரங்களில் உள்ள பல தொழிற்சாலைகளில் தென்னாட்டவர் வேலை செய்கின்றனர்.

"தென்னாட்டில் உள்ள படித்தவர்கள், தங்கள் வாழ்க்கைக்காக வேலை தேடி வடநாடு செல்லும் நிலைமை இருக்கக்கூடாது.

"தொழில்துறை அபிவிருத்தியில் தென்னாடு படுமோசமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

"தென்னாட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகள் அமைத்தாக வேண்டும்; இதற்கு சென்னை சர்க்கார், டெல்லியுடன் கடுமையாகப் போராடியாக வேண்டும்; அப்போதுதான் இங்கு நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்பட முடியும்"

என்று, பிரபல தொழிலதிபரான எஸ். அனந்தராமகிருஷ்ணன் அவர்கள் இங்கு நடைபெற்ற தென் சென்னை மின்சார விநியோக நிறுவன ஊழியர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், இன்னும் சில காலத்திற்சேனும் தனியார் துறை நீடிக்கவேண்டும் என்றும், தொழில்களைத் தேசிய மயமாக்குவதுமட்டும் எல்லாப் பிரச்சினைகளையும் சமாளித்துவிடாது என்றும் குறிப்பிட்டதாகத் தெரிய வருகிறது.

சென்னை கிளைக் கழகச் செயலாளர்களுக்கு

வேண்டுகோள்

★

தேர்தல் நிதி வாரத்தில் திரட்டிய நிதியை, 23—12—56 அன்று சென்னை பார்க் டவுன் இராசப்பச்செட்டித் தெருவில் நடைபெறும் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் செலுத்துமாறு சென்னையிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தூய்மையாக விடுதலை மூலமே தொழிலாளர் நல்வாழ்வு பெற முடியும்

தொழிலாளர் உரிமைப் போராட்டங்களில் தி. மு. கழகம் ஒதுங்கி நின்றதில்லை

என். வி. நடராசன் தெளிவுரை

'தொழிலாளர்களுக்கு தி. மு. கழகம் என்ன செய்துவிட்டது என்று சிலர் கேட்கிறார்களாம்! தொழிலாளர்களின் உரிமைப் பிரச்சினைகளில் தி. மு கழகம் ஒதுங்கியிருந்ததாகவோ அல்லது துரோகம் செய்ததாகவோ அல்லது தொழிற் சங்கங்களை கூறு போட்டதாகவோ யாராவது கூறமுடியுமா என்று கேட்கிறேன். இதுவரை நடைபெற்றிருக்கிற தொழிலாளர் உரிமைப் போராட்டங்களில் திராவிட முன்னேற்றக் கழகம்—திராவிட இயக்கம் யாதொரு பிரதி பிரயோசனம் கருதாது ஈடுபாடு கொண்டிருக்கிறது. இந்த உண்மைகளை தமிழ்நாட்டு தொழிலாளர் இயக்க வரலாறே எடுத்துக்கூறும். தொழிற்சங்கங்களில் தலைவராகவும் செயலாளர்களாகவும் இடம் பெற்றுவிட்டதாலேயே தாங்கள் தான் தொழிலாளர் இயக்கத்திற்கு கர்த்தாக்கள் என்று கருதிக் கொண்டிருப்பவர்கள் இவ்வாறெல்லாம் பொறுப்பற்றவிதமாகப் பேசித்திரிகிறார்கள். இவ்வித அர்த்தமற்ற பேச்சுகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் தலைவர்கள் என்பவர்களைப்பற்றி யாரும் பொருட்படுத்தாமல், நாட்டின் விடுதலைப் பணியில் மற்ற எல்லோரையும்விட தங்களுக்குத்தான் பங்கும் கடமையும் உண்டு என்பதைத் தொழிலாளர் தோழர்கள் அனைவரும் மனதார உணருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற் சங்கங்களை நடத்திச்செல்ல ஆற்றல் இல்லாது ஒதுங்கியிருப்பதாக எவராவது கூறினால், அதைவிட பைத்தியக்காரத்தனம் வேறுயிருக்கமுடியாது. தொழிலாளர்களின்—நடுத்தர மக்களின் நிரந்தரமான நல்வாழ்வுக்கு அடிப்படையான நாட்டு விடுதலைப் பணியில் தி. மு கழகம் ஈடுபட்டிருப்பதால் தொழிற் சங்கத்துறையில் தனித்து நேரடியாக ஈடுபட இயலாமலிருக்கிறது. ஆனால் முக்கியமான விடுதலைப் போரில் தி. மு கழகம் ஈடுபட்டிருக்கிறது. அந்த விடுதலையின் மூலமே தொழிலாளர்களையும் நடுத்தர மக்களையும் தலைநிமிர்ந்து வாழவைக்கமுடியும்."

என்று துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் அவர்கள், நேற்று சென்னை நேப்பியர் பார்க்கில் நடைபெற்ற சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர்கள் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் தரும் இந்த நிதி பத்தாயிரமாகவோ இருபதாயிரமாகவோ இல்லாவிட்டாலும், நீங்கள் காட்டும் இந்த ஆதரவு கழகத்தின் கொள்கைக்கு—இலட்சியங்களுக்கு அஸ்திவாரம் போன்றதாகும். நீங்கள் தேர்தலுக்கெனத் தொகைகளைச் சேர்த்துத் தருவதினால் தேர்தலில் தி. மு. கழகம் வெற்றி பெறுவதைவிட, அதன் பின் மறைந்துகிடக்கும் பாட்டாளிகளின் ஆதரவு எப்படிப்பட்டதென்பதை மாற்றுக்கட்சியினரும் அரசியலாரும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பது முக்கியமானதாகும்.

"ஐதராபாத்தில் நடைபெற்ற அகில இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசில் பேசின வாசவதா என்பவர், பாட்டாளிகள் எல்லாரும் காங்கிரசுக்கே ஓட்டுப் போடவேண்டும்; காங்கிரஸ் ஆட்சியில்தான் அவர்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன என்று கூறியிருக்கிறார். இவ்வாறு கூறின அவரைப்பற்றியும், அவர் சார்ந்துள்ள தேசிய தொழிற்சங்கக் காங்கிரசைப்பற்றியும் நான் அதிகம் விவரிக்கவேண்டியதில்லை ஆனால் காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள் என்று கேட்கிற அவர், மாற்றுக் கட்சியினருக்கும் தங்களுக்கும் உள்ள பேதாபேதங்களை விவரிக்கவில்லை.

"இந்த நாட்டுப் பாட்டாளிகள் கூலி உயர்வுக்காகமட்டும் பாடுபடுவதால் எந்தவிதப் பயனுமில்லை இந்த நாடு நமக்காகவேண்டும்; நமக்குத் தனி உரிமை இருந்தால், பாட்டாளிகள், படித்து வேலையற்றிருப்போர் யாருமே கஷ்டப்பட வேண்டியிருக்காது என்பதைத் தான் தி. மு. கழகம் கூறுகிறது.

"தி. மு. கழகத் தேர்தல் நிதிக்குத் தொழிலாளர் தோழர்கள் நிதி திரட்டித் தருகின்ற அவர்களது உற்சாகத்தைக்கண்டு தி. மு. கழகம் மகிழ்ச்சியடைகிறது; உளம் பூரிக்கிறது.

'பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றாலே, அக்கழகத்தில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களெல்லாரும் பாட்டாளி மக்கள்தான். இன்னும் அதிகமாகச் சொன்னால் தி. மு. கழகம் நூற்றுக்கு நூறு என்று சொல்லும் அளவுக்குப் பாட்டாளி மக்களும் நடுத்தர மக்களும் கொண்ட இயக்கமாகும்.

'இன்றுள்ள தொழிலாளத் தோழர்கள் அத்தனைபேரும், காங்கிரசிலோ, அல்லது மற்றெந்த மாறுபட்டக் கட்சிகளிலோ கொண்டிருப்பதைவிட தி. மு கழகத்தின் மீது அதிகமான அளவுக்கு அன்பும் பாசமும் கொண்டிருக்கின்றனர்.

"இங்கிருக்கிற சில தொழிலாளர் தலைவர்கள், தொழிலாளர்களையெல்லாம் ஏதோ அவர்கள் ஒரு தனிப்பட்டப் பிறவிகள் என்றும், அவர்களுக்குத் தேவையானதெல்லாம் வெறும் கூலி உயர்வு மட்டும்தான் என்றும் கருதுகின்றனர். தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு தேவையானதுதான்; இல்லையென்று தி. மு. கழகம் மறுக்கவில்லை—அதை நாங்கள் அலட்சியப்படுத்தவுமில்லை. ஆனால் அதே சம்பள உயர்வுக்காகத் தொழிலாளர்கள் எப்படி வெள்ளைக்காரர் காலத்திலும் தடியடிக்கு ஆளாக்கப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் இன்னும் பல அடக்கு முறைகளுக்கும் ஆளாக்கப்பட்டார்களோ, அதே நிலை இந்தக் காலத்திலும்—நேருவின் ஆட்சியிலும் இல்லையென்று கூற முடியுமா?

"தங்களுடைய முக்கிய உரிமைகளுக்காக வெள்ளைக்காரன் காலத்தில என்னென்ன கொடுமைகளைத் தொழிலாளர்கள் அனுபவித்தார்களோ, அதே தொல்லைகளையும் துன்பங்களையும், இன்னும் தங்களுடைய சர்வசாதாரண உரிமைகளுக்குக்கூட அனுபவித்து வருவதை நாம் பார்க்கிறோமே! தங்களுக்கிருக்கும் கொடுமைகள் எல்லாம் எப்போது தீரும் என்று இன்றுவரை தொழிலாளர்கள் அனைவரும் ஏங்கிக்கொண்டிருப்பதை நாம்இன்றும் காண்கிறோமே.

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

அஜந்தா ஓவியங்கள்

பிரதிகள் எடுக்க டில்லி முயற்சி

புதுடில்லி, டிச. 22—

அஜந்தா சித்திரங்களை ஓவியர்கள் வரையவிருக்கிறார்களாம்.

அஜந்தா சித்திரங்களைப் பார்த்து அவைபோல வேறு சித்திரங்களை வரையும் இந்த வேலைக்காக நடைமுறை நிதி ஆண்டில் ரூ. 31,880 - வரை மானியமாக டில்லி சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தச் சித்திரங்களை வரைந்தால், அவுரங்பாதில் ஒரு தனி கலைக்கூடம் அமைக்க வேண்டுவது ஒன்றும் அவசியமானதல்ல!

இந்தத் தகவலை, உதவி கல்வி மந்திரி டாக்டர் எம் எம். தாஸ், மக்கள் சபைக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது தெரிவித்திருக்கிறார்.

குழாய்க் கிணறுகள் தோண்ட கடனுதவியாம்!

தஞ்சை, டிச. 22—

பாசனத்திற்கான தண்ணீர் வசதிக்குக் குழாய்க் கிணறுகள் (வடிமுனை கிணறுகள்) தோண்டுவதற்காகச் சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குக் கடன் உதவியளிக்கும் நோக்கத்துடன் ரூ. 16 இலட்சம் மதிப்புள்ள திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

சென்னை மாநிலத்தில் மொத்தம் 600 கிணறுகள் தோண்டுவதற்குக் கடன் உதவியளிக்கப்படுமாம்.

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஊருக்கும் ரூ. 2,500 வரை கடனுதவியளிக்கப்படுமாம்.

உயர் மட்டத்தில் தண்ணீர் உள்ள பகுதிகளுக்கே இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுமாம்.

★★★★★★★★★★★★★★★★★

அண்ணா

கே. ஏ. மதியழகன்

ஆகியோர் நடிக்கும்

நாடகங்கள்!

21, 22-1-1957-ந் தேதிகளில்

உடுமலையிலும்

23-1-1957-ந் தேதியன்று

கணியூரிலும்

நடைபெறும்

★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

சென்னை 22—12—'56 சனி

தடை விதிக்காதீர்!

நடைபெற இருக்கின்ற பொதுத் தேர்தலில், ஆளும் கட்சியாக இருக்கின்ற நிலை மாறி எதிர்க்கட்சியாக உருப்பெறும் நிலை காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டுவிடக்கூடும் என நிச்சயமாகக் கருதுவதற்கில்லை. தனித்தனியாக எதிர்க் கட்சிகளுக்குள்ள பலத் தாழ்வையும், அவைகளுக்குள்ளாக இருந்துவரக்கூடிய உட்பிணக்கையும் மட்டுமே அளவுகோலாகக்கொண்டு, இத்தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு நிலை மாற்றம் ஏற்படுவது பொதுவாக எதிர்பார்க்க முடியாதது என நாம் கருதவில்லை.

ஆளும் கட்சியான காங்கிரசு தேர்தல் காலத்திலும் அதிகாரத்திலேயே இருக்கப்போகின்ற அரிய வாய்ப்பையும் அதன் பலனைப் பொதுமக்களிடை உருவாகக்கூடிய மனப்போக்கையும், அக்கட்சிக்குள்ள பலம் பொருந்திய பிரச்சார வசதிகளையும் சீர்தூக்கிப் பார்க்கின்ற எவருக்கும், மேற்குறித்த முடிவிற்கு வருவதைத் தவிர்த்து வேறு முடிவிற்கு வருவதற்கு இடமில்லை. ஆளும் கட்சியான காங்கிரசுக் கட்சிக்குள்ள பலம் பொருந்திய பிரச்சார வாய்ப்பும் வசதிகளும் எதிர்க்கட்சிகள் எதற்கும் அறவே கிடையாது.

பிரச்சார வாய்ப்பையும் வசதிகளையும் பொறுத்தவரையில்தான், காங்கிரசுக் கட்சிக்கும் மற்ற எதிர்க் கட்சிகளுக்கும் முறையே பலமும் பலத்தாழ்வும் இருந்துவருகிறது என்பதில்லை. வாக்காளர்களைப் பொறுத்தும் மற்றொரு பொதுவான பெருங் குறை இருந்துவருகிறது.

பொதுமக்களிடம் இருந்துவரும் பெருங் குறைக்கு அவர்களே முழுதும் பொறுப்பேற்க வேண்டியவர்களாவர் என்றுட சொல்லிவிடுவதற்கில்லை. தொன்றுதொட்டுப் பிடித்துவந்துள்ள அப்பெருங்குறையின் பிடியிலிருந்து பெருமபாலான மக்கள் விடுபட்டுவிடுவது என்பது சில ஆண்டுக் காலத்திற்குள்ளாக வெற்றிபெற்றுவிடக்கூடியதுமன்று. நிற்க,

அதிகாரத்தில் இருந்துகொண்டே காங்கிரசுக் கட்சி தேர்தலில் பங்கு கொள்வதற்கும், மற்ற எதிர்க் கட்சிகள் பங்கு கொள்வதற்கும் அடிப்படையிலேயே பெரியதோர் வித்தியாசம் உண்டு. அதாவது, அமைச்சராக இருக்கின்ற ஒருவர் அமைச்சராக இருந்துவரும் நிலையிலேயே, குறிப்பிட்ட ஒரு தொகுதியில் தேர்தலில் நிற்க முன்வருவாரானல், குறிப்பிட்ட தொகுதியிலுள்ள வட்டத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் அனைவரும் அத்தொகுதியில் அமைச்சர் அபேட்சகர் போகின்ற மூலை முடுக்கிற்கெல்லாம் உடன்வந்து திருவர். அப்படி அதிகாரிகள் புடைசூழ அமைச்சர் அபேட்சகர் குறிப்பிட்ட தொகுதியில் சுற்றி வருவது, அத்தொகுதி வாக்காளரிடை பெரியதோர் பரபரப்பைக் கொடுத்தே தீரும் என்பதில் ஐயமில்லை.

ஆனல், அதே நேரத்தில், அத்தொகுதியில் நிற்கும் அமைச்சர் அபேட்சகரை எதிர்த்துப் போட்டியிடும் வேறு ஒரு எதிர்க்கட்சி அபேட்சகர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிருர். அமைச்சர் அபேட்சகர் சுற்றுப்பயணத்தில் இருந்த பகட்டை, பொதுமக்களுக்கு மருட்சியூட்டும் அதிகார அந்தஸ்தை இந்த எதிர்க் கட்சி அபேட்சகர் சுற்றுப்பயணத்தில் கடுகளவும் காண முடியாது.

வாக்காளர்களின் கருத்தையும் கவனத்தையும் கவரக்கூடிய வாய்ப்பும் வசதிகளும் இந்த மட்டும்தான் காங்கிரசு அபேட்சகர்களுக்கு இருந்துவருகின்றன என்று எவரும் முடிவு கட்டிவிட மாட்டார்கள்.

காங்கிரசு ஆளும் கட்சியாக இருக்கின்ற காரணத்தினல், தக்கவர்களை விட்டு ஆசை காட்டியும் அச்சமூட்டியும் வாக்காளர்களைத் தனது அபேட்சகர்களுக்கே ஆதரவு காட்டுமாறு செய்விக்கச் சுலபமாக முடியக்கூடும். அத்தகு வசதி எந்த எதிர்க்கட்சிக்கும் அறவே கிடையாது.

செய்திப் படக்காட்சி என்ற பெயரால் தனது அபேட்சகர்களுக்கு விளம்பரம் தேடிக் கொள்ளும் வசதி காங்கிரசுக் கட்சிக்கு மட்டுமே ஏகபோக உரிமையாக இன்று இருந்து வருகிறது. இதுபற்றி எண்ணிடக்கூட எதிர்க் கட்சிகளுக்கு இடம் இல்லை.

பாதாளம் வரையில் பாயக்கூடிய பண பலத்தில் மூழ்கிக் கிடப்பது காங்கிரசுக் கட்சியர்கும். சமுதாயத்தில் இருந்துவரும் மேட்டுக்குடிகள் அனைவரும் காங்கிரசுக் கட்சிக்குள் குடிபுகுந்து இருக்கின்றனர். இத்துறைபற்றி எதிர்க் கட்சிகள் கனவிலும் கருதுவதற்கில்லை.

காங்கிரசுக் கட்சிக்கு அருந்துணையாக உள்ள பத்திரிகைப் பிரச்சார சாதனத்தைக் குறித்துக் குறிப்பிடாமல் இருப்பதே நல்லது.

இவ்வளவு வசதிகளைப் பெற்றுள்ள காங்கிரசுக் கட்சி, மற்றொரு பெரிய பலம் பொருந்திய பிரச்சார வசதியையும் பெற்றிருக்கிறது. அதுதான், தனது தேர்தல் பிரச்சாரத்தை அகில இந்திய வானெலி மூலம் பட்டிதொட்டிகளில் உள்ள மக்களும் அறியுமாறு செய்யும் வசதி.

வானெலி பேச்சில் 'தேர்தல்' என்ற சொல் இடம் பெருது இருக்கலாம். அச்சொல்லே இடம் பெறவிடாமல், காங்கிரசு அமைச்சர்கள் தங்களுடைய தேர்தல் பிரச்சாரத்தைச் சாமர்த்தியமாகச் செய்யக்கூடும்.

வானெலியில் பேசுவதற்கு, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்ற எதிர்க் கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் எனக் கோரப்பட்டது. அது நியாயமான கோரிக்கையாகும்.

ஆனல் அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவும் காங்கிரசு ஆளவந்தார்களுக்கு விருப்பமில்லை.

ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு கட்சியும், தனது கட்சியின் தேர்தல் குறிக்கோளை வானெலி மூலம் பொதுமக்களுக்கு விளக்கலாம் என்று இந்தியப் பேரரசின் சார்பில் அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதற்கும் ஒரு நிபந்தனை உண்டு. அதாவது, ஒவ்வொரு கட்சியின் தேர்தல் குறிக்கோளையும் வானெலி ஊழியர்களே பத்துப் பத்து நிமிடங்கள் ஒலிபரப்புவர் என்பதுதான் அந்த நிபந்தனை.

தம்தம் கட்சியின் குறிக்கோளை கட்சித் தலைவர்களாக வானெலி மூலம் பொதுமக்களிடம் விளக்கிக் கூறுவதற்கும், அரசாங்க ஊழியர்கள் அக்குறிக்கோள்களை ஒலிபரப்புவதற்கும் வித்தியாசம் உண்டு.

எதிர்க் கட்சிகளின் தேர்தல் குறிக்கோள்களை ஒலிபரப்ப ஒப்புக்கொண்டிருப்பது, மற்ற எதிர்க் கட்சிகளுக்கு வானெலியில் தங்கள் கருத்தைக் கூற வழங்கப்படும் உரிமையாகக் கொள்வதற்கில்லை. மற்றச் செய்திகள் ஒலிபரப்பப்படுவது போன்றே, கட்சிகளின் குறிக்கோள்களும் செய்தியாக ஒலிபரப்பப்படுகிறது என்றுதான் அதைக் கொள்ளவேண்டும்.

அகில இந்திய வானெலி காங்கிரசுக் கட்சியின் பூர்வீகச் சொத்தல்ல. பொதுத்தேர்தல் போன்ற ஒரு சிறப்பான விஷயத்தில், தமதம் கருத்தைப் பொதுமக்கள் அறியச்செய்ய, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கட்சிகளுக்கும் சரி, ஒப்புக்கொள்ளப்பட்டில்லாத கட்சிகளுக்கும் சரி, தனி அபேட்சகர்களுக்கும் சரி, வானெலியைப் பயன்படுத்த உரிமை இருக்கவேண்டும். அதுதான் ஜனநாயக முறையாகும்.

வானெலியைப் பயன்படுத்துவதில் எதிர்க் கட்சிகளுக்கும் மற்றத் தனி நபர்களுக்கும் இருக்கின்ற நியாயமான உரிமை இருக்கட்டும். அதைவிட நியாயமானது, ஒவ்வொரு கட்சியினுடையவும் தனித் தனி அபேட்சகர்களுடையவும் தேர்தல் முறையீட்டைக் கேட்கக்கூடிய உரிமை, வரி கொடுக்கும் ஒவ்வொரு சாதாரண குடிமகனுக்கும உண்டு. தேர்தலில் பங்குகொள்ளும் ஒவ்வொருவருடைய கருத்தையும் தெரிந்து தெளிவு பெறுவதின் மூலமதான், ஒவ்வொரு குடிமகனும தனது வாக்குரிமையை ஒழுங்காகப் பயன்படுத்துவது சாத்தியமாகும். எனவே, அப்புனிதமான உரிமையைச் சாதாரணக் குடிமக்களுக்கு வழங்க மறுப்பது, சனநாயகத்தைக் கொலை செய்யும் தீவினையாகும.

டெல்லி காங்கிரசு ஆளவந்தார்களுக்கு உண்மையிலேயே ஜனநாயகத்தைக் காப்பதில் கருத்தும் கவலையும் இருக்குமானல், மற்றக் கட்சியினரின் கருத்தை வானெலி மூலம அறியக் குடிமக்களுக்குள்ள அடிப்படை ஜனநாயக உரிமைக்குத் தடை விதிக்க நினைப்பதை உடனடியாகத் தவிர்க்க வேண்டும்.

தேர்தல் 'இலட்சியம்?'

சென்னை, டிச. 22—

ஆறுவது படிவம் வரை எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவசக் கல்வியளிப்பதே சென்னை அரசாங்கத்தின் இலட்சியமாம்! இதை படிப்படியாக அமுல் நடத்த அரசாங்கம் முயற்சி செய்து வருகிறதாம்!

'போதி மரத்தைத் தொடாதே'

முன்னள் பர்மா முதலமைச்சருக்கு புத்த சந்நியாசிகள் தடை!

கொழும்பு, டிச. 20—

முன்னள் பர்மியப் பிரதமரான யூ-நூ, இலங்கையில் உள்ள 'புத்த போதி மரத்தைத் தொடுவதற்கு அனுமதிக்கப்படவில்லையாம்!

இந்த மரம், 2000 ஆண்டுகளுக்குமுன் புத்த கயாவில் உள்ள போதி மரக் கிளையைக் கொண்டுவந்து, இலங்கை அனுராதபுரத்தில் நடப்பட்டு வளர்ந்த ஒன்ருகும்!

இதனைத் தொட்டு தரிசிக்க யூ-நூ அனுமதி கோரி கிடைக்காமற்போய்விட்டதாம்!

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கூறியும்கூட அந்த மரத்தின் பாதுகாப்பாளர்களான புத்த சந்நியாசிகள் அனுமதி தர மறுத்துவிட்டாராம்!

முன்போரு முறைகூட யூ-நூ இதுபோல அனுமதி கேட்டு மறுக்கப்பட்டாராம்!

'கடவுளர் தளபதி'

அலகாபாத்தில் தோண்டி எடுக்கப்பட்டாராம்!

அலகாபாத், டிச. 20—

'கடவுளரின் தளபதி' கண்டு பிடிக்கப்பட்டிருக்கிருராம்!

'சுவாமி கார்த்திகேயா' என்றழைக்கப்படும் 'கடவுளின்' உருவச்சிலை ஒன்று அகப்பட்டிருக்கிறதாம்!

இது கி. பி. இரண்டாம் நூற்ருண்டைச் சேர்ந்ததாம்!

மதுரா மாவட்டத்தில் ஒரு ஊயலிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட இந்தத் 'தளபதி' சிலை, மதுரா புதைபொருள் கண்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறதாம்!

கி மு. முதல் மூன்றும் நூற்ருண்டுகளைச் சேர்ந்ததும், மித்ரா அரசர்கள் காலத்தைச் சேர்ந்தவையுமான பல செப்பு நாணயங்களும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளனவாம்!

பாலாற்றிலிருந்து தமிழ் நாட்டிற்குத் தண்ணீர்!

எதிர்பார்க்கக் கூடாது என ஒப்பந்தமாம்!

புதுடில்லி, டிச. 20—

பாலாற்றிலிருந்து தமிழ்நாட்டு மக்கள் தண்ணீர் எதிர்பார்க்கக்கூடாதாம!

தண்ணீர் வேண்டுமென்ற தங்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்கு வேறு வழிகளைத்தான நாட வேண்டுமாம்!

இப்படி, சென்னை சர்க்காருக்கும் மைசூர் சர்க்காருக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாம்!

இப்படியெல்லாம் மாநிலங்கள் சபையில் நீர்ப்பாசன இலாகா உதவி மந்திரி ஜெய் சுக்லால் ஹாதி தெரிவித்திருக்கிருராம்!

ஒப்பந்தம்!

'1892-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறி மைசூர் சர்க்கார் பாலாற்று நீரில் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான அளவை பெத்தமங்கலா, ராமசாகரா என்ற இரு குளங்களில திருப்பிவிட்டுத் தேக்கிக்கொள்ளுகிருர்கள்' என்று, சென்னை சர்க்கார் சார்பில் புகார் கூறப்பட்டதை ஒட்டி, இரு மாநில சர்க்காரின் பிரதம என்ஜினியர்களும் டெல்லி சர்க்கார் பிரதிநிதிகளும் நான்கு நாட்களுக்கு மேல் பெங்களூரில் கடந்த ஜூன் திங்களில்கூடி விவாதித்த பிறகே, 'மைசூர் சர்க்கார் ஒப்பந்தத்தை மீறவில்லை' என்று முடிவெடுத்தனர் என்றும் அந்த உதவி மந்திரி கூறியிருக்கிருராம்.

மராத்தி மொழியை சகித்துக்கொள்ள முடியாத இந்தி வெறியர்கள்!

மத்தியப் பிரதேச சட்டசபையில் தகராறு

போபால், டிச. 20—

'புதிய மத்திய பிரதேச மாநிலத்தின் ஆட்சி மொழி எது?' என்ற கேள்வி எழுந்தபோது, சட்டசபைத் தலைவர், பதில் கூருமல் சபையை ஒத்திவைத்திருக்கிருராம்.

மராத்தியில்

ஒரு எதிர்க் கட்சி உறுப்பினர் மராத்தியில் பேசத் துவங்கியதும், அதைச்சகித்துக்கொள்ள முடியாத சிலர், ஆட்சேபம் கிளப்பினர்களாம்

முன்னைய ம. பி. மாநிலம் ஒரு இரு மொழி மாநிலமாக இருந்ததால், இந்தி, மராட்டியம் இரண்டிலும் பேசலாம் என்பது சட்டசபை விதியாக இருந்தது.

இப்போது மத்தியப் பிரதேசம் ஒரே இந்தி மொழி மாநிலமாக ஆக்கப்பட்டிருக்கும்போது, இந்தியில்தான் பேசவேண்டும் என்று கோரப்பட்டதாம்.

மராத்தியில் பேசிய உறுப்பினரோ, பழைய சட்டசபையின் விதிகளே இன்னும் பின்பற்றப்படுவதால் தமக்கு மராத்தியில் பேச உரிமை உண்டென்று பேசியிருக்கிருர்.

சபைத் தலைவர் முடிவு பின் அறிவிக்கப்படும் என்று கூறினராம்.

ஏட்டிக்குப் போட்டி?

160 மைல் நீளமுள்ள எண்ணெய் குழாய் அமைக்க இஸ்ரேல் முயற்சி

இன்னும் சில வாரங்களில் இஸ்ரேல் பகுதியிலிருந்து மத்திய தரைக் கடலவரையில் 160 மைல் நீளத்திற்கு எண்ணெய்க் குழாயை பிரெஞ்சு நிறுவனமொன்றின் உதவியுடன் இஸ்ரேல் அரசாங்கம் அமைக்குமாம்.

நீண்டகாலக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் இஸ்ரேலுக்குப் பிரெஞ்சு அரசாங்கம் 300-இலட்சம் பவுன் அளிக்க முன்வந்துள்ளதாம்.

இந்தியாவிலேயே சாயப் பொருள்கள் தயாரிப்பு

'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டஇறுதியில் இந்தியாவிலேயே தேவையான சாயப்பொருள்களில் 60-லிருந்து 70 சதவிகிதம்வரை உற்பத்தி செய்யலாம் என்று மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எட்டு புது சாயத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான விண்ணப்பங்கள் வந்திருக்கிறதென்றும் அவை பரிசிலனை செய்யப்பட்டு வருகிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

அமைச்சரின் அச்சம்!

இந்த ஆண்டில், தென்னட்டில் நல்ல விளைச்சலில் அறுவடை இருக்கிறதென்றும், அரிசி விலை மணங்குக்கு ரூ. 6 வரை குறைந்துள்ளதாகவும் மக்கள் சபையில் துணை உணவு அமைச்சர் கூறியுள்ளார்

இந்த விலைக் குறைவை, நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் சில எதிர்க்கட்சிகள் தங்கள் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் அளவிற்கு விலைகள் குறைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன்-எம். ஜி. இராமச்சந்திரன்-அனீபா சிறப்புச் சொற்பொழிவுச் சுற்றுப்பயணம்

சென்ற இடங்களிலெல்லாம் சீரிய முயற்சி

வழிநெடுக மக்களின் மாபெரும் வரவேற்பு

தேர்தல் நிதி ரூ. 7,480 திரண்டது

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், பொதுக் குழு உறுப்பினரும் புரட்சி நடிகருமான தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், இசைமுரசு நாகூர் அனீபா அவர்களும் 15—12—56 முதல் 17—12—56 வரையில் மூன்று நாட்கள் திருச்சி, மதுரை, கோவில்பட்டி, தூத்துக்குடி, துறையூர், நாமக்கல் ஆகிய ஆறு இடங்களில் தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்களில் கலந்துகொண்டு ரூ. 7,480—12—0 தேர்தல் நிதியாகத் திரட்டிவந்தனர்.

சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்கள் மிகச் சிறப்போடும் பெருமையோடும், புகழோடும் மிக வெற்றிகரமாகவும் ஆங்காங்கு நடந்தேறின. ஒவ்வொரு கூட்டத்திலும் ஆடவரும் பெண்டிரும், குழந்தைகளும் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டு தேர்தல் நிதிக்கு ஆக்கம் அளித்தனர்.

மதுரைச் சிறப்புக் கூட்டம் திறந்த வெளி அரங்கிலும், மற்றைய ஊர்க் கூட்டங்கள் கொட்டகைகளிலும் நடைபெற்றன. கொட்டகைகளில் இடம் இல்லாத அளவுக்கு மக்கள் வெள்ளம் திரண்டிருந்ததோடு, நன்கொடை டிக்கட் வாங்க விழைந்தும் கிடைக்கப் பெறுமல் ஏராளமான மக்கள் வெளியே குழுமியிருந்தனர்.

தலைவர்களைக்காண ஒவ்வொரு ஊரிலும் ஊர் மக்கள் பெருவாரியாகத் திரண்டுவந்து கொட்டகைகளின் எதிரில் நின்று ஆரவாரித்துக், கையொலி எழுப்பி, வாழ்த்தொலி முழக்கி வரவேற்றதோடு, அவ்வாறே வழியனுப்பியும் வைத்தனர்.

தலைவர்கள் ஒரு ஊர்ச் சிறப்புக் கூட்டத்தை முடித்துக்கொண்டு மற்றொரு ஊருக்குப் போகிறார்கள் என்பதைக் கேள்வியுற்ற இடையிலே உள்ள ஊர்களைச் சார்ந்த கழகத் தோழர்களும், பொதுவாக உள்ள ஆடவரும், பெண்களும், குழந்தைகளும் ஆங்காங்கு சாலையின் ஓரத்தில் வந்து சாரை சாரையாகவும், கும்பல் கும்பலாகவும் திரண்டு நின்று வாழ்த்தொலி கிளப்பி ஆரவாரித்ததோடு, மலர்மாலைகள் சூட்டி வரவேற்கவும் செய்தனர்.

தலைவர்களைப் பார்க்கவேண்டும் என்ற பேராவலால் ஒவ்வொரு ஊரிலும் காரை நசுக்கி விடுவதுபோல் மக்கள் திரண்டு வந்து சூழ்ந்து கொள்வதும், அவர்களுக்கெல்லாம் நன்மொழி கூறி, வணக்கம் செலுத்தி, அவர்களிடமிருந்து தலைவர்கள் விடைபெற்றுக் கொள்வதும் வழிநெடுகக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஒவ்வொரு சிறப்புக் கூட்டத்திலும், அந்த ஊரை அடுத்துள்ள நகரங்கள், சிற்றூர், பேரூர் ஆகியவற்றிலிருந்து ஏராளமான கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும், பொது மக்களும் வந்திருந்து சிறப்புக் கூட்டங்களைச் சிறப்பித்தனர்.

ஒவ்வொரு சிறப்புக் கூட்டங்களிலும் பல்வேறு கிளைக் கழகங்களின் சார்பாகவும், வேறு பல அமைப்புக்களின் சார்பாகவும், தனிப்பட்ட தோழர்களின் சார்பாகவும் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கும், இசைமுரசு நாகூர் அனீபா அவர்களுக்கும் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு சிறப்புக் கூட்டத்திலும் இசைமுரசு நாகூர் அனீபா அவர்கள் உணர்ச்சியும், எழுச்சியும் ஊட்டக்கூடிய அரிய கருத்துக்கள் அடங்கிய இயக்கப் பாடல்களைப் பாடி, வந்திருந்தோரை மகிழ்வித்தார்,

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தி. மு. கழகத்தின் தேர்தல் திட்டத்தைப் பற்றியும், தேர்தல் நிதி சேர்க்கவேண்டிய இன்றியமையாத நிலையைப் பற்றியும், தி. மு கழகம் ஆற்றிவரும் அருந்தொண்டுகள் பற்றியும், ஆளவந்தாரின் திறமையற்ற ஆட்சி முறையைப்பற்றியும், அமைச்சர்களின் கையாலாகாதத் தன்மையால் நாட்டுக்கும் மக்களுக்கும், மொழிக்கும் ஏற்பட்டுள்ள கேடுகள்—நட்டங்கள் பற்றியும், தி. மு கழகத்தவர் சட்டமன்றம் புகுந்து ஆற்றக்கூடிய தொண்டுகள் பற்றியும், ஆங்காங்குக் கொடுக்கப்பட்ட தலைப்புகள் பற்றியும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பொதுப்பணியில் கலைஞர்களுக்குள்ள பங்குபற்றியும், கலைஞர்கள் தி. மு. கழகத்தை ஆதரிக்கவேண்டிய நிலையில் எப்படியிருக்கிறார்கள் என்பது பற்றியும், நடராசப்பிள்ளை, விசுவநாததாஸ், கே. பி. சுந்தரம்பாள் ஆகிய கலைஞர்களைக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் காங்கிரசை எப்படி எப்படியெல்லாம் வளர்த்தார்கள் என்பது பற்றியும், அத்தகைய காங்கிரஸ்காரர்கள் இன்று தி. மு. கழகத்தில் கலைஞர்கள் பணியாற்றுவதைக் கண்டிக்க முற்பட்டிருப்பது எப்படி வெட்கக்கேடாக அமைந்திருக்கிறது என்பது பற்றியும், கழகக் கொள்கைகளைக் கலைத்துறையின் மூலம் எப்படியெல்லாம் பரப்பலாம் என்பது பற்றியும், தம்மை நடிகன் என்ற முறையைவிட தி. மு. கழகத் தொண்டன் என்ற முறையில் நாட்டு மக்கள் எப்படியெல்லாம் போற்றுகிறார்கள் என்பது பற்றியும், என்ன நிலை ஏற்பட்டாலும் வாழ்விலும சரி—தாழ்விலும சரி, தாம் ஒரு தி. மு. கழகத் தொண்டராக இருந்தே தீவிரமாகப் பாடுபடப்போவதாகவும், உணர்ச்சியோடு பேசியது மட்டுமல்லாமல், ஆங்காங்கு கொடுக்கப்பட்ட தலைப்புகள் பற்றியும் சீரிய முறையில் சொற்பொழிவாற்றினார்கள்,

சிறப்புக் கூட்டங்களை ஆங்காங்கு ஏற்பாடு செய்திருந்த கிளைகளும், கழகத் தோழர்களும, மாவட்டச் செயலாளர்களும், கிளைக் கழகச் செயலாளர்களும் மிகவும் அரும்பாடுபட்டு அழகாகவும், சிறப்பாகவும், முறையாகவும் ஏற்பாடு செய்திருந்தனர்.

சுருங்கக் கூறவேண்டுமானால், எல்லா இடங்களிலும் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்கள் மிக வெற்றிகரமாக நடந்தேறிப் புகழைத் தேடித் தந்தன.

திருச்சி :

சிறப்புக்கூட்டம், 15—12—56 காலை 10 மணிக்குத் திருச்சி தேவர் மன்றத்தில் தொடங்கிற்று தோழர் எம். எஸ் மணி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள்.

இசைமுரசு நாகூர் அனீபா அவர்கள் இன்னிசைப் பாட்டுகள் இசைத்தார்கள்.

தோழர் அம்பில் தருமலிங்கம் அவர்கள் 'தி மு க-வும் தேர்தலும்' பற்றியும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'இலக்கிய இன்பம்' பற்றியும், புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் அவர்கள் 'கலையும் வாழ்வும்' பற்றியும் அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

பல கிளைகள், அமைப்புகள், தனிப்பட்டவர்கள்சார்பாகச் சொற்பொழிவாளருக்குக் கைத்தறிஆடைகளும், மலர் மாலைகளும் சூட்டப்பட்டன.

தேர்தல் நிதியாக ரூ 1,112-0-0 திரட்டப்பட்டுப் பொதுச்செயலாளர் வசம் நகரச் செயலாளரால் ஒப்படைக்கப்பட்டது.

நன்றி கூறக் கூட்டம் பகல் 1-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

மதுரை :

மதுரை தமுக்கம் மைதானம் திறந்த வெளி அரங்கில் 15-12-56 இரவு 9 மணிக்கு மதுரை நகர தி. மு. கழகத்தின் சார்பாகச் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இசைமுரசு நாகூர் அனீபா அவர்கள் இன்னிசையரங்கு நடத்தினார்கள்.

கூட்டத்திற்கு டாக்டர் அருணாசலம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'வள்ளுவர் காட்டும் அரசியல் நெறி' பற்றியும், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 'நாடும் நடிகர்களும்' என்பது பற்றியும் சீரிய முறையில் சொற்பொழிவாற்றினார்கள்.

மேடையிலேயே பல தனிப்பட்டவர்கள் தாமே வந்து தேர்தல் நிதியைச் சில்லறையாகத் தந்தது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

தேர்தல் நிதியின் அவசியம்பற்றி மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

சொற்பொழிவாளருக்குக் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் வழங்கப்பட்டன.

தேர்தல் நிதியாக ரூ. 2,000-0-0 தோழர் முத்து அவர்களால் பொதுச்செயலாளரிடம் கொடுக்கப்பட்டது.

தலைவர் முடிவுரை, நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

கோவில்பட்டி :

16-12-56 காலை 10-30 மணிக்குக் கோவில்பட்டி பாப்புலர் டாக்கீசில் சிறப்புக் கூட்டம் கூடிற்று.

கூட்டத்திற்கு கோவில்பட்டி கிளைச் செயலாளர் தோழர் பொன்னுச்சாமி தலைமைவகித்தார்.

இசை முரசு நாகூர்-அனீபா அவர்கள் இன்னிசைபாட, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் எம் ஜி இராமச்சந்திரன், எஸ் முத்து ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவுகள் அரிய முறையில் ஆற்றினார்கள். அன்னாருக்குக் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணியப்பட்டன.

தேர்தல் நிதியாக ரூ 1,018-11-6 பொதுச்செயலாளரிடம் வழங்கப்பட்டது.

நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிந்தது.

பிறகு, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இட்டங்குடி பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றார்கள்.

தூத்துக்குடி :

தூத்துக்குடி டெல்பின் தியேட்டரில், 16-12-56 மாலை 5 மணிக்கு சிறப்புக்கூட்டம் துவக்கப்பெற்றது

கூட்டம் துவங்குவதற்கு முன்னால், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., நாகூர் அனீபா, மதுரை எஸ். முத்து ஆகியோர் மறைந்த மாவீரர் தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் கல்லறைக்குச் சென்று மரியாதையின் அறிகுறியாக மலர் மாலை சூட்டினார்கள்.

சிறப்புக்கூட்டத்திற்குத் தோழர் எம். எஸ். சிவசாமி அவர்கள் தலைமை தாங்கினார்.

இயக்க நண்பர் ஒருவரின் சிறுபெண் நடனம் ஆடிக்காட்டினாள்.

பின்னர், இசை முரசு நாகூர் அனீபா அவர்கள், மிக்க உருக்கமுடனும், எழுச்சியுடனும் இசைப் பாட்டுக்கள் பாடினார்.

அடுத்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், எம். ஜி. ஆர், எஸ் முத்து ஆகியோர் கருத்து விருந்தளித்தனர்.

தேர்தல் நிதியாக ரூ. 1,117-12-0 கூட்டத்தில் பொதுச் செயலாளரிடம் அளிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினருக்குக் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணியப்பட்டன.

நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிந்தது.

துறையூர் :

17-12-56 காலை துறையூர் பாரதி தியேட்டரில் நிதியளிப்புச் சிறப்புக்கூட்டம் தோழர் டி. பி. அழகமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இசை முரசு நாகூர்-அனீபா அவர்கள் இன்னிசை வழங்கினார்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., தோழர்கள் சிற்றரசு சுப்பிரமணியம், எம். எஸ். மணி, அம்பில் தருமலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு சீரியசொற்பொழிவாற்றினார்கள்.

சொற்பொழிவாளருக்குக் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் சூட்டப்பட்டன.

தேர்தல் நிதியாக ரூ. 1,337-9-3 கூட்டத்தில் கொடுக்கப்பட்டது.

நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

நாமக்கல் :

நாமக்கல் தியேட்டரில் 17—12—56 மாலை சிறப்புக் கூட்டம் தோழர் பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இசைமுரசு அனீபா அவர்கள் முதலில் பாட்டுக்கள் பாடினார்கள். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தோழர் காளியப்பன் ஆகியோர் அழகிய முறையில் சொற்பொழிவாற்றினார்கள்.

பல கிளைகளின் சார்பாகக் கைத்தறி ஆடைகளும் மாலைகளும் வழங்கப்பட்டன.

தேர்தல் நிதியாக ரூ. 894-11-8 (முன்பு ரூ. 50) அளிக்கப்பட்டது.

நன்றி கூறலுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

அண்ணு பேச்சு...

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

முதல் தவணையாக—நாங்கள் இன்னின்னார்—எங்களை எதிர்ப்பவர்கள் இன்னின்னார்—நீங்கள் இன்னின்னார் என்பதைத் தெரிவிக்கும் அரிச்சுவடி நிலையிலிருக்கும் போஸ்டர்களுக்கு மட்டும் ரூ. 16,000 தேவை. இதையெல்லாம் கேட்கும்போது, வாங்குகிற பணமெல்லாம் எங்கே போகிறது என்று ஒரு வேளை சில மாற்றுக்கட்சி நண்பர்கள் கேட்கக்கூடும். ஆனால், பணத்தை வாங்கும் வேகத்தைவிட 10 மடங்காக, அது கையிலிருந்து வெளியேறுகிறது.

வேகத்தைக் குறைக்கும் வெண்புறு போல்!

"அழகான ஒரு வெண்புறு; அது வானத்திலே வட்டமிட்டுப் பறப்பதைக்கண்டு ஆனந்தமடைகிறோம்; இப்படியே வேகமாகப் பறந்து வேறு எங்காவது போய் விடுமோ என்று நாம் கிலி கொள்ளும் நேரத்தில், வானத்திலே வட்டமிட்ட வெண்புறா, தனது வேகத்தைக் குறைத்துக்கொண்டு திடீரென நமது மடியிலே வந்து விழுவதுபோல், நீங்கள் தருகின்ற பணமான வெண்புறு எங்கு போய் விடுமோ என்ற பயம் உங்களுக்கு வேண்டாம். நீங்கள் கொடுக்கும் இந்தப் பணம் திரும்பவும் உங்களுக்கேதான் கிடைக்கும். ஆனால், பணமாக அல்ல! இந்தப் பணத்தைக்கொண்டு தேர்தலில் நின்று வெற்றி பெற்றால் அந்த வெற்றியாக உங்களிடம் அது திரும்பக் கிடைக்கும்.

வெள்ளிப் பாலாடை!

"கலியாணத்தின்போது கொஞ்சம் வேடிக்கைக்காகவும் குறும்புக்காகவும் சிலர் திருமணப் பரிசாக வெள்ளிப் பாலாடை கொடுப்பதுண்டு. அந்த வெள்ளிப் பாலாடை திருமணமானவர்களுக்கு உடனே பயன்படாவிட்டாலும் ஒரு வருடத்திற்குப் பிறகு அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்குப் பாலூட்டப் பயன்படும். அதுபோல இப்போது நீங்கள் தரும் இந்தப் பணமெல்லாம் வெள்ளிப் பாலாடை !"

---

20 இலட்சம் ரூபாய் பாழ்!

'அம்பர் சர்க்கா' தயாரிக்க தொழிற்சாலைகளாம்!

சென்னையின் ஐந்தாண்டுத் திட்ட அபிவிருத்திகள்

சென்னை, டிச. 20—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சென்னை சர்க்கார் நிறுவ உத்தேசித்திருக்கும் 'கிசான் சர்க்கா,' மற்றும் உபகரணங்கள் உற்பத்தித் தொழிற்சாலைக்குப் பதிலாக டில்லி சர்க்கார், அம்பர் சர்க்கா திட்டத்தைப் புகுத்துவதை ஒட்டி, சென்னை சர்க்காரும், 'அம்பர் சர்க்கா' உற்பத்தித் தொழிற்சாலையே அமைப்பது என்று முடிவு செய்திருக்கிறார்களாம்.

அம்பர் சர்க்காவில் உபயோகிக்கப்படும் இரும்பாலான பாகங்களைத் தயாரிப்பதற்காக ஒரு தொழிற்சாலை சென்னையில் நிறுவப்படுமாம்

'சரஞ்சம் காரியாலயங்கள்'

இதர மரத்தாலான பாகங்களைத் தயாரிக்கவும், 'அம்பர் சர்க்கா'வை பூட்டவுமாக சென்னை, திருப்பூர், சங்கரன் கோவில், வடலூர், திருச்சி, ஆரணி ஆகிய ஆறு ஊர்களில் 'சரஞ்ஜம் காரியாலயங்கள்' எனும் தொழிற்சாலைகள் அமையுமாம்.

இதற்காக சென்னை சர்க்கார், சுமார் 20 இலட்சம் ரூபாய் வரை செலவிடுகிறார்களாம்!

அண்ணா சொற்பொழிவு

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆதரவை மேலும் பெருக்குங்கள்; அதன் பிறகு கவனிக்கிறேன் உங்கள் திராவிட நாடு பிரச்சினையை' என்றாவது அவர் சொல்லட்டுமே?

காமராசர் கூறாமல் இருக்க முடியுமா?

"வருகிறாரே பண்டிதர்—காமராசரிடம் கேட்காமலா இருப்பார்? இங்கு எத்தனை இடங்களுக்கு யார் யார் போட்டியிடுகிறார்கள் என்று கேட்கும்போது, காமராசரும் நம்மைப் பற்றிக் கூறாமலா இருக்கப் போகிறார்? அப்போதாவது நேரு பண்டிதர் தெரிந்துகொள்ளட்டுமே—திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒரு பெரிய இயக்கம் இருப்பதை!

தி. மு. க. மீது வெளி நாடுகள் கண்ணோட்டம்

"இந்த நேரத்தில் ஒரு அரசியல் உண்மையையும் கூற ஆசைப்படுகிறேன். இந்தியாவிலிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் பற்றியத் தகவல்களைத் தருமாறு வெளி நாட்டு அரசாங்கங்கள் இந்திய சர்க்காரைக் கேட்டுவருகின்றனவாம்!

கேள்வி சரிதானா?

"இந்த இயக்கத்தில் பாட்டாளிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்; ஆயிரக்கணக்கான மாணவர்கள் தங்கள் ஒத்துழைப்பைத் தருகிறார்கள்; நடுத்தர மக்கள் இதற்கு நண்பர்களாக இருக்கின்றனர். இப்படிப்பட்ட கட்சியைப் பார்த்து, 'எத்தனை பேர் ஜெயிப்பார்கள்?' என்று கேட்கிறார்களாம்!

ஆரூடம் கேட்கிறார்கள்

"மேல்நாடுகளிலெல்லாம், பெண்ணின் வயதையும், ஆணின் சம்பளத்தையும் பற்றிக் கேட்கவே கூடாது என்பது ஒரு நாகரீகமாம். அதுபோல, இங்கு, அரசியல் அநாகரீகமான முறையில், 'எத்தனை இடங்களில் ஜெயிப்பார்கள்?' என்று கேட்கிறார்களாம்! அவர்கள் எத்தனை இடங்களில் தோற்பார்களோ அத்தனை இடங்களில் நாங்கள் ஜெயிப்போம்! அனாதைகள் போல் இருந்தவர்கள்—ஊர் பேர் அறியாமல் சுற்றி அலைந்தவர்கள் இன்று 150 இடங்களுக்குப் போட்டியிடுகிறார்கள் எனக் கேட்டு பாராட்டுத் தெரிவிக்க மனமில்லை; சகித்துக்கொள்ளவும் முடியவில்லை இவர்களுக்கு!

கேலி பேசுகிறார், கேலி!

'பரமசிவன் கழுத்திலே கிடக்கும் பாம்பு, கருடனைக் கண்டு, 'சௌக்கியமா?' என்று கேட்டதாம்; உடனே கருடன், 'எல்லோரும் இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் சௌகரியமாகத்தான் இருப்பார்கள்' என்று கூறிற்றாம்! அதுபோல் இன்று காமராசர், நேருவின் பக்கத்தில் நின்று கொண்டு நம்மைப் பார்த்துக் கேலி பேசுகிறார்.

மக்கள் கைவிடுவரா?

"ஆனால் நாங்கள் மக்கள் பக்கத்திலே நிற்கிறோம். மக்களாகிய உங்களைப் பரிபூரணமாக, அப்பழுக்கில்லாமல், வலது கரத்தை இடது கரம் நம்புவதுபோல், இடது கரத்தை வலது கரம் நம்புவதுபோல், வலது கண்ணை இடது கண் நம்புவதுபோல் இடது கண்ணை வலது கண் நம்புவதுபோல் நம்புகிறோம். அப்படி நம்பும் அளவிற்கு நீங்களும் உற்சாகத்தோடும் உணர்ச்சியோடும் உங்கள் ஆதரவைத் தந்திருக்கிறீர்கள். இப்படியே நீங்கள் மேலும் மேலும் எங்களை ஆதரித்தால் நட்டாற்றில் எங்களைக் கைவிட மாட்டீர்கள் என்று நம்புவோம். இந்த உங்கள் ஆதரவில் சிறிது தளர்ச்சி ஏற்பட்டாலும் அந்தப் 'பாவம்' உங்கள் தலையிலேயே விழட்டும் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்லமுடியும்?

நித்திய நாதமாகப் பிரச்சாரம் விளங்கும்

"உங்கள் ஒவ்வொருவருடைய பணமும், உழைப்பும், பிரச்சாரத் தன்மையும் நல்ல முறையிலே பயன்பட்டால் நிச்சயம் கழகம் தேர்தலிலே வெற்றிபெறும். யார் யார் எந்தெந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்களோ, அந்தந்தத் துறைக்கேற்றவாறு பிரச்சாரத்தை இப்போதே துவங்கலாம். அந்த வகையில் நமது பிரச்சாரம் நித்திய நாதமாக விளங்கினால், நிச்சயம் நாம் தேர்தலில் வெற்றி பெறுவது என்பது உறுதி என்று கூறிக்கொள்கிறேன்."

மக்களின் இதயம் நமக்கு மகிழ்ச்சியூட்டுகிறது!

பாட்டாளிகள் காட்டும் பரிவு உற்சாகம் தருகிறது

தொழிலாளர்களுக்கு மனங்கனிந்த பாராட்டு

"திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் நிதிக்கு உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் பாட்டாளி மக்களிடம் வசூலித்து, நல்ல மனதுடன் அளித்த இந்தத் தேர்தல் நிதிக்கும், இதையொட்டி சுற்றுப்புறப் பகுதிகளிலுள்ள கிளைக் கழகங்களும் தேர்தல் நிதி அளித்தமைக்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்காத பற்றுக்கொண்ட தொழிலாளத் தோழர்கள்

"பொதுவாகவே சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர்கள் தி. மு. கழகத்தின்மீது நீங்காத பற்றுக் கொண்டவர்கள். எந்த நேரத்திலும் அவர்கள் சளைக்காமல் கழகத்திற்கு உதவி செய்துவந்திருக்கிறார்கள். எந்தெந்த நேரத்தில் தி. மு. கழகம், பொதுமக்கள் ஆதரவுடன் நிதி திரட்டிக் காரியம் ஆற்றுவதென ஆர்வத்தோடு ஈடுபடுகிறதோ அந்தச் சமயங்களில் எல்லாம் நமது தொழிலாள நண்பர்கள், மற்றக் கட்சியினர் நம்மைப் பற்றிச் சொல்வதையெல்லாம் — 'இவர்களுக்குத் தொழிலாளர்கள் பற்றிக் கவலையில்லை; இவர்களுக்கு எந்தத் தொழிலாளர்கள் ஆதரவு காட்டுகின்றனர்?'—என்று சொல்வதையெல்லாம் பொய்யாக்கிக் காட்டும் வகையில், தங்களுக்கும் கழகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்ற பேருண்மையைத் தெளிவாக்கும் வகையில் நடந்துகொண்டிருக்கின்றனர்.

மக்களின் இதயம் கண்டு மனமகிழ்கிறோம்

"இங்கே தரப்படும் தொகை பத்தாயிரமாகவோ, இருபதாயிரமாகவோ இல்லாவிட்டாலும், அத்தொகைக்குப் பின்னால் இருக்கிற இதயத்தை, மக்களுடைய சக்தியை, அவர்களுடைய பெருந்தன்மையைக் கண்டு பாராட்டுகிறேன்.

காங்கிரஸ் நிதி திரட்டும் நிலை கேட்டீரா?

"காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் நிதி என்று தரப்படுவதாக இருந்தால் அது இம்மாதிரிவெட்டவெளியில், பொதுக்கூட்டங்கள் மூலமாக தரப்படாது! எங்காவது அமைதியுள்ள பங்களாக்களில், ஆள் அரவம் கேட்காத இடத்தில், வட்டிக் கணக்குகளையெல்லாம் பார்த்து முடித்துவிட்டு, கள்ள மார்க்கெட் கணக்குகளையெல்லாம் கணித்துவிட்டு ஒருவர் உட்கார்ந்திருப்பார்; வெளியே இருந்து கொண்டு இன்னொருவர் எட்டிப் பார்ப்பார்! 'யாரது?' என்பார்—இவர்; 'என்ன, நான்தான்' என்பார்—வெளியே இருப்பவர்; 'நான் தானென்றால்?........தெரியவில்லையே' என்பார். உடனேவெளியே நிற்பவர் நுழைவார். ஆளைக் கண்டதும் இவர், 'ஓஹோ, நீங்களா? வாருங்கள்' என்பார். இருவரும் சோபாவில் அமர்ந்து கொண்டு, பக்கத்திலிருப்போருக்குக்கூடக் கேட்காதபடி பேசுவார்கள்; போனவர், உள்ளே இருந்தவர் தொடையில் 4 விரல்களை வைத்துக் காட்டுவார்; அவர், இவரது தொடையில் 2 விரல்களை வைத்துக் காட்டுவார். இதற்கு அர்த்தமென்னவென்றால், 'தேர்தல் நிதிக்கு நீங்கள் ரூ. 4,000 தரவேண்டும்' என்று கேட்பதும் உடனே மற்றவர், 'இல்லை இல்லை: ரூ. 2,000 மட்டும் தரமுடியும்' என்று கூறுவதும்தான். இப்படிப் பேரம் பேசி, கடைசியில், வந்தவர் கொஞ்சம் பணம் பெற்றுச் செல்வார்—தேர்தல் நிதிக்கு! இது காங்கிரசார் தேர்தல் நிதி திரட்டும் வகை!

பாட்டாளிகள் பாசறையில் உருவாகும் காசுகள்

"நாமென்ன, அப்படிப்பட்டவர்களா? நமது கழகம் பாட்டாளிகள் பாசறை! இதில், இப்படிப்பட்ட பொதுக்கூட்டங்களில் நாலணா இரண்டணா ஒரு ரூபாய் என்று திரட்டின பணம்தானே நமக்குக் கிடைக்கும்? ஆனால், இப்படி திரட்டப்படும் பணத்தால் சாதிக்கப்படும் செயல் 'அந்த' ரூபாய்க்குக் கிடையாதே!

பணம் புரண்ட இடத்தில் பழகினேன்

"காங்கிரஸ் நண்பர்கள் என்னைப் பற்றிப் பேசும்போதெல்லாம், அண்ணாதுரையை நமக்குத் தெரியாதா? இவர் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தவராயிற்றே?' என்கின்றனராம். அந்த ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்திருந்தவர்களெல்லாம் இந்தப் பணத்தையெல்லாம் தொட்டுக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள் காரணம், இந்த நாணயங்களில் படிந்திருக்கும் அழுக்கு தங்கள் கைகளில் ஒட்டிக்கொண்டால் எங்கே வியாதி வந்து விடுமோ என்ற அச்சம்! அப்படிப் பணம் புரண்ட இடத்திலேதான் நான் பழகினேன்.

அந்தக் காலம் சீமான்களின் காலம்

"ஒரு தடவை, தேர்தல் சமயத்தின்போது 'பொப்பிலி அவர்களின் தொகுதியில் பிரச்சாரம் செய்யச் சென்றிருந்தேன். இப்போதெல்லாம் அருகிலே இருக்கும் நமது துணைப் பொதுச்செயலாளர் நடராசன் அவர்கள், என்னை ஆட்டிப் படைக்கிறார் — அங்கே கூட்டம்; இங்கே கூட்டம்; எல்லாவற்றிற்கும் ஒத்துக்கொள்ளுமாறு உத்தரவிடுகிறார். ஆனால், அந்தச் சமயத்தில் நான் பொப்பிலி தொகுதியில் தங்கிய நாட்கள் 22; நடைபெற்ற கூட்டங்கள் இரண்டு; இரண்டு கூட்டங்களிலுமாக மொத்தம் 40 நிமிடநேரம் பேசியிருக்கிறேன். அந்த 40 நிமிடம் பேசினதற்கே, 'ஏன் இப்படி உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்?' என்று கேட்பார் பொப்பிலி! அப்படிப்பட்டவர்களிடமும் நான் பழகிவந்தேன். அந்தக் காலம் சீமான்களின் காலம்; அப்போதெல்லாம் எங்கள் மகாநாடு கூட, சென்னையிலுள்ள சௌந்தரிய மகாலில்தான் நடைபெறும்!

மக்கள் சக்தியாக மாற்றியமைத்தோம்

"அந்நிலையிலிருந்த ஜஸ்டிஸ் கட்சியைத்தான் மக்கள் சக்தியாக—திராவிடர் கழகமாக மாற்றினோம்; சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில், யார் யார் கழகத்தில் சேர விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் தங்கள் தங்கள் பதவிகளைத் துறக்கவேண்டும்; போராட்டங்களில் ஈடுபட அழைக்கும்போது தயாராக இருக்கவேண்டும்—என்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றினோம். இப்போது சொன்னால் ஒருவேளை நமது திராவிட கழக நண்பர்களுக்கு ஆச்சரியம் கூட உண்டாகலாம்—அந்தத் தீர்மானத்திற்குப் பெயரே 'அண்ணாதுரை தீர்மானம்' என்பதைக் கேட்கும்போது! அந்தக் காலத்தில் நான் திராவிட கழகத்திற்குத் துரோகி அல்ல—பெரியார் வெகு தாராளமாகப் பேசுவார்—அது வசந்த காலம்! அந்தத் தீர்மானத்திற்குத் தலைப்பிடுவதுபற்றி என்னிடம் யோசனை கேட்டதும் 'பதவித் துறப்புத் தீர்மானம்' என்று போடலாமே என்று நான் சொன்னதும், பெரியார், சந்தோஷம் கலந்த கோபத்தோடு என்னைக் கடிந்துகொண்டு, இது 'அண்ணாதுரை தீர்மானம்' என்றே இருக்கட்டுமே என்று கூறித் தமது பொன்னான கரத்தாலேயே எழுதினார்; அந்தத் தீர்மானத்திற்குப் பின்னர்தான் சீமான்களிடத்தில் இருந்த கட்சி ஏழைகள் மத்தியில் வந்தது; அரண்மனைகளில் குடியேறியிருந்த கட்சி ஆலமரத்தடியில் கூடிற்று; மக்களைச் சந்தித்தது; உழைத்து உழைத்து, அதனால் மேனி கறுத்தவர்களை நேருக்குநேர் சந்தித்தது. அதனால்தான் நீங்கள் இன்று எங்களை இங்கு பார்க்கிறீர்கள்—நாங்கள் உங்களைப் பார்க்கிறோம்

பாட்டாளிகளின் கூடாரமாக துலங்குகிறது

"பெரிய பணக்காரர்களின் கட்சியாக இருந்த இந்த இயக்கம் இன்று பாட்டாளிகளின் மாபெரும் இயக்கமாக மாறிவிட்டது.

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு நான் ஒரு தடவை சென்றிருந்தபோது, நமது நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன் ஆகியோரெல்லாம் மாணவர்களாக இருந்தபோது, புதியதாக மிருகக் காட்சிசாலைக்கு வந்த மிருகத்தைப் பார்ப்பது போல் கூடுகின்ற, என்னைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர். என்னிடம் எத்தனையோ கேள்விகள் கேட்டனர். 'ஆங்கிலத்தில் எதுவரை படித்திருக்கிறீர்கள்?' என்றனர்; 'எம். ஏ. வரை' என்றேன்; 'என்ன பாடம்?' என்றனர்; 'பொருளாதாரம்' என்றேன்; 'அப்படியானால் கார்ல் மார்க்ஸ் பற்றிப் படித்திருப்பீர்களே?' என வினவினர். 'ஆம், படித்திருக்கிறேன்' என்றேன். உடனே அவர்களெல்லாம், 'கார்ல் மார்க்சின் தத்துவங்களையெல்லாம் படித்த பிறகுமா இந்தக் கன்றாவிக் கட்சியில் சேர்ந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டனர். அப்போது அவர்களுக்கு நான் தந்த பதில் இப்போதும் அவர்கள் ஞாபகத்தில் இருக்கும் என நம்புகிறேன்—'நான் ஜஸ்டிஸ் கட்சியில் நுழைந்திருப்பது, அதிலுள்ளவர்களையெல்லாம் வெளியே துரத்திவிட்டு உங்களைச் சேர்த்துக்கொள்ளத்தான்' என்று கூறினேன். அன்று நான் அவர்களுக்குக் கூறினதுபோலவே, சீமான்களிடம் சிக்கியிருந்த ஜஸ்டிஸ் கட்சி, பாட்டாளிகளின் கட்சியாக—ஏழைகளின் கட்சியாக மாறிவிட்டது.

பற்றும் பாசமும் நிறைய உண்டு

"இந்த இயக்கத்தின் பக்கத்திலே நிற்க பாட்டாளிகளுக்குப் பரிபூரண உரிமை உண்டு பாட்டாளிகளுடன் சேர்ந்துகொள்ள எனக்கும் நிறைய உரிமை உண்டு. இவர்களெல்லாம் என்னுடைய சொந்த இனத்தவர்; இவர்கள் பேசுவது என சொந்த மொழி என்ற பாசத்துடனும், பாட்டாளித் தோழர்களிடையே சீர்திருத்தக் கருத்துக்கள் மலர்ந்தால்தான் நாடு வளம் பெறும் என்ற தத்துவத்துடனும் அவர்களை அணுகுகிறேன். ஒரு காலத்திலே ஜமீன்தார்களிடமும் மிட்டா மிராசுகளிடமும் இருந்து வந்த இந்த இயக்கத்தைப் பாமரர்களிடம் அழைத்து வந்திருக்கிறோம் என்பதால் நாம் அவர்களுடன் சொந்தம் கொண்டாடுகிறோம்.

நாட்டிற்கு நல்லறிவு பரப்ப முனைவீர்!

'தொழிலாளர் இயக்கத்தை, ஆச்சரியமான, புரட்சிகரமான கட்சிகள் என்று நினைத்துக்கொள்ளும் கட்சிகள் தங்கள் கையில் வைத்திருந்தபோதும்கூட, அந்த இயக்கத் தோழர்கள் நாம் பேசுவதைக் கேட்டுவிட்டு, 'அவர்கள் சொல்வது உண்மைதானே' என்று ஒப்புக்கொள்கின்றனர்! பொன்மலையிலுள்ள தொழிலாளர்களிடமும், சிமெண்டு ஆலைத் தொழிலாளர்களிடமும், ரயில்வே தொழிலாளர்களிடமும், கட்டை வெட்டுவோர் — காகித ஆலையில் வேலை செய்வோர், கைவண்டி இழுப்போர் ஆகிய எல்லோரிடமும் இந்த எண்ணம் இருப்பதைக் காண்கிறோம். ஆனால், அவர்களைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கும் தலைவர்கள் என்பவர்களிடம் அந்த எண்ணம் கிடையாது; ஏனென்றால், அவர்கள் தொழிலாளர்கள் அல்ல. எனவே, தொழிலாளர்களாகிய நீங்கள், உங்கள் இயக்கமான இந்தக் கழகத்திற்குத் தேர்தல் நிதி திரட்டித் தந்தது பொருத்தமானதேயாகும். நாட்டுக்கு நல்லறிவு பரப்பும் காரியமாகும் அது!

"இந்த உத்தமப் பண்பும் உள்ள உறுதியும் கொண்டுள்ள சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர்களை நான் பாராட்டுகிறேன்.

மகிழ்ச்சியைத் துறந்து நிதி உதவி தந்தனர்

"இந்தத் தேர்தல் நிதிக்கென அவர்கள் கொடுத்த ஒவ்வொரு 4 அணாவும் 8 அணாவும் எதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பதையும் நான் உணருகிறேன். குழந்தைக்குக் கிலுகிலுப்பை வாங்கலாம் என்று வைத்திருக்கலாம் ஒருவர்; சிகரெட் வாங்குவதற்கு வைத்திருக்கலாம் இன்னொருவர்; மனைவிக்கு கூந்தலிலே கட்டிக்கொள்ள ரிப்பன் வாங்க வைத்திருக்கலாம் வேறொருவர். இப்படி உங்கள் மகிழ்ச்சியையெல்லாம் கெடுத்துக்கொண்டு தேர்தல் நிதி தரவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திவிட்டதற்காக மன்னித்துவிடுங்கள். என்ன செய்வது? உங்களைவிட்டால் எங்களுக்கும் வேறு வழியில்லை; எங்களை விட்டால் உங்களுக்கும் வேறு வழியில்லை.

"இன்று நீங்கள் அளித்த தொகையையும், இதுவரை பல்வேறு வகைகளிலுமாகத் திரட்டிய தொகையையும் சேர்த்து நான் கணக்கிட்டால் சுமார் ரூ 12,000 வரலாம்.

"இதே நேரத்தில் ஒன்றுமட்டும் உங்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன். நாம் தேர்தலில் நிற்கிறோம் என்பதைப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறும் வகையில் 4, 5 வகையான போஸ்டர்கள் அச்சடிக்கக் கொடுத்திருக்கிறோம்; அந்தப் போஸ்டர்களுக்கு மட்டும் ரூ. 16,000 தேவை இதனைக் கும் அந்தப் போஸ்டர்களெல்லாம்

(5-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு :

	ரூ.	அ.	பை
முன் (21—12—56) இதழ்ப்படி.	17,138	14	9
வட ஆற்காடு மாவட்டத்தில் அண்ணா அவர்களும் கழகத் தோழர்களும் நடித்த நாடகம் வேலூரில் 16—12—56 அன்று அண்ணா, என். வி. நடராசன் கலந்துகொண்ட சிறப்புக்கூட்டம் ஆகியவைகளின் மூலம் (செலவு நீக்கி)	5,323	0	0
சென்னையில் 9—12—56 அன்று கே. ஆர். ஆர். குழுவினர், எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர், எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் கலந்துகொண்ட கலை விழாவின் மூலம் (செலவு நீக்கி)	4,500	0	0
சென்னையில் 20—12—56 அன்று நேப்பியர் பூங்காவில் அண்ணா, என். வி. நடராசன் கலந்துகொண்ட சிமசன் குரூப் தொழிலாளர் தோழர்கள் கூட்டத்தில், சிம்சன் குரூப் பல்வேறு இலாகா தொழிலாளர் அளித்தது	625	7	5

மேற்படி கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் சென்னையிலுள்ள சில கிளைகள் அளித்த நிதி ரூ. 353-12-1 : விவரம் வருமாறு :—

	ரூ.	அ.	பை
40-வது வட்டத் தி. மு. கழகம்	2	2	3
2-வது வட்டத் தி. மு. கழகம்	125	2	7
41-வது வட்டத் தி. மு. கழகம்	5	1	0
30-வது வட்டத் தி. மு. கழகம்	70	4	0
5-வது வட்டத் தி. மு. கழகம்	60	2	3
26-வது வட்டத் தி. மு. கழகம்	25	0	0
4-வது வட்டத் தி. மு. கழக ஆதரவாளர்கள்	41	0	0
சிந்தாதிரிப்பேட்டை கலைவளர் மன்றம்	25	0	0
கரூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வே. கி. சம்பத் மூலம்	1,556	0	0
கோவை தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வே. கி. சம்பத் மூலம்	1,128	12	6
காங்கேயம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வே. கி. சம்பத் மூலம்	14	12	6
கொளாநல்லி பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் மூலம்	15	0	0
கே. ராசகோபால், கண்டி ரோடு கொழும்பு	10	0	0
பொள்ளாச்சி தி. மு. கழகம்	150	0	0
உப்பட்டி (நீலகிரி) தி. மு. கழகம்	25	0	0
இரா. தேவராசு, உருளிக்கல், வால்பாறை	15	0	0
இராயகிரி தி. மு. கழகம் (சங்கரன்கோயில்)	10	0	0
கோவை கு. நடராசு	10	5	0
சி. தங்கச்சாமி, அயன்புரம், சென்னை	5	0	0
என். மாதவன், மேற்கு வங்காளம்	5	0	0
புதுப்பேட்டை அமிர்தநிதி மூலமாக அவரது நண்பர்கள்	11	8	0
முடிதிருத்தும் தொழிலாளர் சங்கம் மதுராந்தகம்	10	0	0
வ. தங்கையா பாளையங்கோட்டை	5	0	0
ஏ. எஸ். வேலன் ஆவல்சூரன்பட்டி விருதுநகர்	10	0	0
ஆர். கண்ணன் புதுப்பட்டு	1	0	0
கீரனூர் தி. மு. கழகம் திருச்சி	12	9	0
பரமக்குடி தி. மு. கழகம்	12	8	0
பெருமகளூர் தி. மு. கழகம்	8	0	0
முத்துப்பேட்டை தி. மு. கழகம்	51	10	0
இலக்குமணபுரி (பெங்களூர்) தி. மு. கழகம்	7	13	0
வெள்ளவாரிப்புதூர் (மேட்டுவலசு) தி. மு. கழகம	25	0	0
ஆனைமலை தி. மு. கழகம்	25	0	0
எஸ். பங்காரு கோவை	5	0	0
நல்லூர் தி. மு. கழகம் (தெ. ஆ.)	12	0	0
ஆவடி தி. மு. கழகம்	8	6	0
பாகிமானூர் தி. மு. கழகம்	21	0	0
மேல்பாலாபுரம் தி. மு. க. (திருத்தணி வட்டம்)	5	0	0
சித்தையன்கோட்டை தி. மு. கழகம்	10	0	0
சொ. கருப்புச்சாமி, திருவில்லிபுத்தூர்	10	8	9
சு. பிரகாசம, புலியூர்	10	0	0
சி. கே. குமாரசாமி, தி. மு. கழகம் எரசினமபாளையம் (கோவை)	25	0	0
ஜி. ஆர். நாராயணசாமி, ஒடுவங்குறிச்சி	25	0	0
காரமடை தி. மு. கழகம (கோவை)	34	11	0
வால்பாறை தி. மு. கழகம்	40	4	0
கவுந்தப்பாடி தி. மு. கழகம்	20	0	0
ப. மு. ஆறுமுகம், வத்தாப்பூர்	3	0	0
கே. கருததோவியன் உளுந்தூர்பேட்டை தி. மு. கழகம்	15	0	0
ஆயக்காரமபுலம் முதல்சேத்தி தி. மு. கழகம்	7	0	0
சொ. யோவான், பேட்டா இலங்கை	12	0	0
நாட்டரசன்கோட்டை தி. மு. கழகம்	10	0	0
மனகலையம்பேட்டை தி. மு. கழகம் (தஞ்சை மாவட்டம்)	15	0	0
தொரவலூர் தெ. ஆ.) தி. மு. கழகம்	5	0	0
சென்னை 1-வது வட்டத் தி. மு. கழகம்	18	11	1
குடந்தைத் தி. மு. கழகம் ...	73	9	9
வேலூர்—சேலம் தி. மு. கழகம் ...	89	15	3
முதுவை முத்துயாறன் பர்மா ...	10	0	0
சிறுமதுரை (தெ. ஆ) தி. மு. கழகம்	15	0	0
கடமங்குடி (திருப்பனந்தாள்) தி. மு. கழகம்	10	12	0

(தொடர்ச்சி அடுத்த கலம் பார்க்கவும்)

சேலம் நகர கிளைக் கழகச் செயலாளர்களுக்கு

"24-12-56 மாலை 3 மணிக்கு, சேலம் நகர தி. மு கழக இல்லத்தில் தொகுதிக் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும். சேலம் நகரத்தில் உள்ள ஒவ்வொரு வட்டக் கிளையும், செயலாளர் உட்பட மூன்று பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அக்கூட்டத்திற்கு அனுப்பவேண்டுகிறேன். இதையே அழைப்பாகக் கொண்டு பிரதிநிதிகள் தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

—என்று, சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

சென்னை 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக ஆண்டு விழா

24—12—56 மாலை 6 மணிக்கு, சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை, லாயர் சின்னதம்பி முதலி தெருவில், திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக 4-வது ஆண்டு விழா, தோழர் மு. நடராசன் தலைமையில் நடைபெறும்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் கண்ணதாசன், எஸ். எஸ் தென்னரசு, சி. ஆர். பாலசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

கூட்டத்தில், தி. மு. க. தேர்தல் நிதி அளிக்கப்படும்.

மக்கள் முற்போக்கு மன்றத் துவக்க விழா

23-12-56 மாலை 6 மணிக்கு, சென்னை—வேளானத் தேனும் பேட்டை ஜெமினி அருகில், பீர்காரன் வீதியில் மேற்படி மன்றத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் தங்கவேலன் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இராம. வெள்ளையன், தோழியர் அலமேலு-அப்பாதுரை, ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

23—12—1956 ஞாயிறு பகல் 2 மணிக்கு

மராமத்து அமைச்சர் இராமநாதபுரம் இராஜா தலைமை வகிப்பார்

நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் திறந்துவைப்பார்

ரேக்ல—சைக்கிள்—ரிக்ஷா ஓட்டப்பந்தயங்கள்!

சர்க்கஸ், தந்திரக்காட்சி, பம்பாய் நடனம், ஓவியக்கலை—மற்றும் பல!

மாலை 6–மணிக்கு : சகுந்தலா கலை அரங்கில்

லலிதா & குழுவினர்

பரதநாட்டியம், ஓரியண்டல் நடனம் நடைபெறும்

★

24—12—1956 திங்கள் மாலை 6 மணிக்கு

பேபி டி. சூரியபிரபா & சகோதரிகள்

பரதநாட்டியம், ஓரியண்டல் நடனம் நடைபெறும்

எம். எஸ். மோகன்—கண்டிராக்டர்

தி. மு. கழகத் தேர்தல் நிதி ஊர்வலம்

23—12—56 காலை 9 மணிக்கு, சென்னை 8-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையிலிருந்து தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் தேர்தல் நிதி திரட்டத் தோழர்கள் ஊர்வலமாக வட்ட முழுமையும் வருவார்கள். கழகத் தோழர்கள் குறித்த நேரத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

'குலப் பெண்' நாடகம்

23—12—56 மாலை 6 மணிக்கு சென்னை வண்ணை தியாகராயா பைன் ஆர்ட்ஸ் அகெடமியினரால், தியாகராயர் கலா மண்டபத்தில், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் தோழர் என். என். கண்ணப்பா குழுவினர் நடிக்கும் 'குலப் பெண்' நாடகம் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை — பார்க் டவுன் :

இராசப்பச் செட்டித் தெருவில் (ராட்டன் பசார், பாய்க்கடை அருகில்)

23—12—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : எஸ். எஸ். பி. லிங்கம்

பேசுவோர் :

அண்ணா
எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ.
கே. கோவிந்தசாமி
போளூர்-சுப்பிரமணிம்ம்
மாணவி பி. சற்குணம்
கே. லோகநாதன்

(கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிக்கப்படும்.)

★

பிரம்மபுரம் :

தி. மு கழகத் துவக்க விழா

25-12-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் : வேலம்-தம்பிதாசன்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு
வி. கே. முனுசாமி, அரசு,
சசி, நேசத்தம்பி, சேகர்,
எழிலரசன்.

★

புளியால் :

(திருவாடானை வட்டம்)

25 –12—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : வீரப்பன்

பேசுவோர் :

ஈ. வே. கி. சம்பத்
நவ மார்க்கண்டேன்
குரு. இதயமணி

★

கிளையூர் (திருப்பூண்டி) :

24—12—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர் : மு. கருணாநிதி

★

திண்டுக்கல் :

எஸ். பி. லால் திடலில்

23—12—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

ப. நாராயணன்,
அ. சுப்பையா, நா. முத்து,
க. வேலாயுதனார்.

★

மதுரை :

திலகர் திடலில்

23—12—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

ஈ. வே. கி. சம்பத்
எஸ். முத்து எம். சி.,

****

சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்களின்

தி. மு. க. தேர்தல் நிதி அளிப்புக் கூட்டமும்

கே.வி.கே. சாமி இரவு பள்ளித் திறப்புவிழாவும்

25—12—56 செவ்வாய் மாலை 6-மணிக்கு

ஓட்டேரி-பாஷ்யம் ரெட்டி 3-வது தெருவில்

★

தலைவர் : **கே. சுப்பிரமணி**

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்,

கண்ணதாசன் - - அலமேலு-அப்பாதுரை,

அ. உ. நடராசன், பா. வெங்கடாசலம், எல்லப்பன்

க. வரதன், செயலாளர் திரு.வி.க. மறுமலர்ச்சி மன்றம் — ஆர். கணபதி குழுவினர்

****

(முன் கலத் தொடர்ச்சி)

	ரூ.	அ.	பை
சுப்பிரமணியம் முடிஸ்—பொள்ளாச்சி	7	4	0
கே. எம். ஆறுமுகம், முடிஸ் "	25	0	0
வி. சுந்தரராசன் அட்டகெட்டி பொள்ளாச்சி	11	0	0
ஆர். இரத்தினம் பல்லடம்	5	0	0
புதுப்பேட்டை தி. மு. கழகம் நகரி சித்தூர் மாவட்டம்	50	0	0
மாதவரம் தி. மு. கழகம்	15	0	0
ஆற்றலழகன் புதுப்பட்டி கோவை	10	0	0
புளியமங்கலம் தி. மு. சழகம்	10	0	0
தி இராமசாமி முருகனூர் திருச்சி	1	0	0
14—11—56 அன்று நடைபெற்ற சென்னை 27-வது வட்டம் தி. மு. கழகத் துவக்க விழாவில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் மூலம்	100	0	0
ஆக மொத்தம் ரூ	31,812	2	1

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.